அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 04/2026

எனது இலக்கம் : EST-6/04/LON/0202

பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.01.13

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரிவு 13 இனை திருத்தம் செய்தல் விழா முற்பணங்கள்

2015.08.17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 21/2015 மூலம் திருத்தப்பட்டவாறான தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13:2 மற்றும் 13:5 ஆம் உபபிரிவுகளின் மீது தங்களது தயவான கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அதன் உபபிரிவு 13:2 இனை பின்வருமாறு திருத்துவதற்கு 2026.01.12 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

> 13:2 உத்தியோகத்தரின் விருப்பத்தின் பிரகாரம் ஏதேனுமொரு வருடாந்த விழாவுக்காக ரூ. 15,000/- இனை முற்பணமாக வழங்க முடியும். 3:5 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகையைக் கழித்துக் கொள்ளக்கூடிய எல்லைகள் இம் முற்பணத்திற்கு ஏற்புடையதாகாது. இம்முற்பணமானது வட்டியற்றதாகும்.

03. மேற்படி திருத்தம் 2026.01.01 ஆந் திகதி முதல் அமுலாகும் என்பதுடன், இது தொடர்பான ஏனைய ஏற்பாடுகள் அனைத்தும் அதேபோன்று அமுலில் இருக்கும்

04. மேலும், 2026.01.01 ஆந் திகதி முதல் இச்சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் நிலவிய ஏற்பாடுகளின் பிரகாரம், விழா முற்பணத்தைப்

பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்காக இவ் ஏற்பாடுகளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளக்கூடிய விழா முற்பணத்தின் எஞ்சிய தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படலாம். அவ்வாறு வழங்கப்பட்ட பின்னர், தவணைக்கட்டணங்களை அறவிடுவது புதிய ஏற்பாடுகளின் பிரகாரம் திருத்தப்படல் வேண்டும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 011-2699399
தொலைநகல் இலக்கம் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ad-6-est@pubad.gov.lk